152—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***22725—திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை உயர் சிறப்பு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–35

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 1965 ஆம் ஆண்டு 50 M.B.B.S. இடங்களோடு உருவாக்கப்பட்டு, 50 ஆண்டுகளாகத் தொடர்ந்து 50 M.B.B.S. இடங்களோடு மட்டும்தான் இயங்கி வந்தது. இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் அந்த 50 இடங்கள், 100 இடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களது கோரிக்கைக்கேற்ப, செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் படுக்கை வசதிகளெல்லாம் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. ஏற்கெனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்தான், நம்முடைய அவையில் செங்கல்பட்டு மருத்துவமனையில் Cath Lab மற்றும் சிறப்புப் பிரிவுகள் வேண்டுமென்று கேட்டிருந்தார். அவரது கோரிக்கையினை ஏற்று, அங்கே Cath Lab மற்றும் இருதய சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் தொடங்கப்பட்டிருக்கின்றன; நரம்பியல் சிகிச்சைப் பிரிவும் அங்கே தொடங்கப்பட்டிருக்கின்றது; பச்சிளம் குழந்தைகள் பராமரிப்புப் பிரிவும் தொடங்கப்பட்டிருக்கின்றது. இப்பொழுது அங்கு கூடுதலாக விபத்துக் காய சிகிச்சை மையம், TAEI ward போன்றவை தொடங்கப்பட்டு, நானே அங்கு நேரடியாகச் சென்று அவற்றைத் திறந்து வைத்தேன். இதேபோன்று, M.R.I Scan, Cath Lab, C.T. Scan, Digital X–ray, C–Arm, Dialysis போன்ற அனைத்து சிறப்புப் பிரிவுகளும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அந்த

2020 மார்ச் 21]

மருத்துவமனைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 55 ஆண்டுகளைக் கடந்து செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையில் தினமும், செங்கல்பட்டு மாவட்டத்தைச் சுற்றி வசிக்கும் பொது மக்கள் மற்றும் மதுராந்தகம், செய்யூர், திருப்போரூர் மற்றும் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதிகளில் வசிக்கும் ஏழையெளிய மக்கள் ஏறத்தாழ 1,500 பேர் உள் நோயாளிகளாகவும் சுமார் 4,000 பேர் புற நோயாளிகளாகவும் சிகிச்சை பெற்று வருகின்றனர். தேசிய நெடுஞ்சாலையில் விபத்து ஏற்படும்போது சிகிச்சை அளிக்கத் தேவையான மருத்துவ வசதிகளும், உபகரணங்களும் இங்கு இல்லை. குறிப்பாக, தலைக்காய சிகிச்சைப் பிரிவு இல்லாததால், பாதிக்கப்பட்டவர்களை 65 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சென்னை, அரசு பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. குறிப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, இந்த மாவட்ட தலைமை மருத்துவமனையில் neuro surgery செய்வதற்கான வசதிகள் இருந்தாலும், அங்கே தகுதி வாய்ந்த மருத்துவர்கள் குறைவாக உள்ளனர். மேலும், இங்கே vascular surgery செய்வதற்கும், முக்கியமாக தலைக்காய சிகிச்சைப் பிரிவு வேண்டுமென்றும் நான் இந்த மன்றத்தில் பல முறை கேட்டு பதிவு செய்திருக்கின்றேன். எனவே, செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்களின் கோரிக்கைகளை ஏற்று, செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை, உயர் சிறப்பு மருத்துவமனையாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் இந்த அவையில் ஏற்கெனவே குறிப்பிட்டேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இந்த அவையில் கேட்டதற்குப் பிறகு செங்கல்பட்டு மருத்துவமனையில்

ஏற்கெனவே தலைக்காய சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; அங்கே மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். M.R.I. Scan வழங்கப்பட்டிருக்கின்றது. இதற்கு முன்பு அங்கே அந்த வசதிகளெல்லாம் இல்லை. Cath lab கொடுக்கப்பட்டிருக்கின்றது. யாருக்காவது heart attack ஏற்பட்டால், அவர்களுக்கு அங்கேயே stent பொருத்தக்கூடிய, Angioplasty சிகிச்சை செய்யக்கூடிய வசதி 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அங்கு 50 M.B.B.S. இடங்கள் இருந்த நிலையில், அது 100 இடங்களாக உயர்த்தப்பட்டிருக்கின்றது.

ஏற்கெனவே 100 ஏக்கர் இடத்தைத் தேர்வு செய்து, International standard, அதாவது சர்வதேச அளவிலான Yoga and Naturopathy மையத்தை செங்கல்பட்டில் உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம். அதற்கான tender பணிகளெல்லாம் முடிக்கப்பட்டு, அங்கே கட்டுமானப் பணிகள் வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன. சர்வதேச தரத்திலான, 100 கோடி ரூபாய் மதிப்புள்ள Yoga and Naturopathy Centre அங்கே உருவாக்கப்பட்டு வருகின்றது. பல மாநிலங்களைச் சேர்ந்தவர்களையெல்லாம் ஈர்க்கக்கூடிய அளவிற்கு, மிகப் பெரிய அளவில் வசதிகளை செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி வளாகத்தினுள் ஏற்படுத்தியிருக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் குறைவான எண்ணிக்கையில்தான் மருத்துவர்களும், செவிலியர்களும் பணியாற்றுகின்றார்கள். இந்த மருத்துவமனையில் அதிகரிக்கும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப 650 படுக்கைகள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், கூடுதலாக ஏற்படுத்தப்பட்ட படுக்கைகளுக்கு அங்கீகாரம் அளிக்காத காரணத்தினால், பணியாளர்களின் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. ஆகவே, இந்த அரசு, இந்த மருத்துவமனையில் உள்ள 1,300 படுக்கைகளுக்கும் அங்கீகாரம் வழங்கி, கூடுதலாக 200 செவிலியர்கள், மருந்தாளுநர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டும். ஏனென்றால் ஒரே staff, 6, 7 வார்டுகளைச் சேர்த்து பார்க்க

2020 மார்ச் 21]

வேண்டியுள்ளதால், நோயாளிகளுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்க முடியாத ஒரு நிலைமை இருக்கின்றது. மேலும் இந்த மருத்துவமனையில் Non–Communicable Disease–க்கு மருந்து மாத்திரை தட்டுப்பாடு அதிகமாக இருக்கின்றது. எப்பொழுது அங்கு சென்றாலும் மருந்து மாத்திரை கிடைப்பதில்லை என்று பொது மக்கள் குற்றச்சாட்டு சொல்கிறார்கள். அதையும் நீங்கள் சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–40

மேலும், செங்கல்பட்டு அரசு மருத்துவமனை குறித்து கடந்த மூன்று நாட்களாகவே வரும் செய்திகளை செய்தித்தாள்களில் நீங்களெல்லாம் படித்திருப்பீர்கள். அங்குள்ள mortuary–ல் 50 சடலங்களை வைப்பதற்குத்தான் வசதி இருக்கிறது. ஆனால், அங்கே 100–க்கும் மேற்பட்ட சடலங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படும் என்று அந்தப் பகுதி மக்களும், நோயாளிகளும் குறையாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதிலும், unclaimed bodies–தான் பெரும்பாலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே, தாங்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, அவற்றை உரிய முறையில் அகற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் முதல் கேள்வியின்போதே, கடந்த ஆண்டு உறுப்பினர் அவர்கள் இந்த அவையில் கேட்டதற்குப் பிறகு என்னென்ன வசதிகளெல்லாம் அந்த மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் நான் விரிவாக எடுத்துரைத்தேன். அதற்குப் பின்னர், paediatric surgery, ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை, plastic surgery, urology போன்றவற்றிற்கு உயர் சிறப்பு சிகிச்சை பிரிவுகள் அனைத்துமே ரூ.62 கோடி மதிப்பில் தொடங்கப்பட்டிருக்கின்றன. அந்த மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றாக்குறை இல்லை. பொதுவாக, ஒரு நாளைக்கு அரசு மருத்துவமனைகளுக்கு ஐந்து இலட்சம் புற நோயாளிகள் வந்துகொண்டிருந்தார்கள். கடந்த ஓரிரு ஆண்டுகளில், ஒரு நாளைக்கு 8 இலட்சம் பேர் அரசு மருத்துவமனைகளுக்கு வருகிறார்கள். வரக்கூடிய நோயாளிகளின்

எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அதற்குத் தகுந்தாற்போல், தேவைக்கேற்ப முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், அந்தந்த வார்டுகளில் கூடுதல் செவிலியர்களை நியமிக்கக்கூடிய வழிவகை இருக்கிறது. அதற்கேற்ப அரசு அதைக் கனிவோடு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், ஓர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 50 சடலங்களை வைப்பதற்கான இடம் இருந்தால் போதுமானது. அதற்குமேல் தேவையில்லை. ஏனென்றால், unclaimed bodies–ஐ ஒரு வாரத்திற்குத்தான் அரசு மருத்துவமனையிலுள்ள mortuary–ல் வைத்திருப்போம். அதற்குப் பிறகு அங்குள்ள காவல் துறை அதிகாரிகளிடம் சொல்லி, unclaimed bodies–ஐ காவல் துறையின் மூலமாக immediate ஆக அப்புறப்படுத்திவிடுவோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுதொடர்பாக சொன்ன கருத்து குறித்து அங்கு உடனடியாக ஆய்வு செய்யப்படும். 50 சடலங்களுக்குமேல் வைக்கக்கூடிய நிலை நிச்சயமாக அங்கு இல்லை. அவ்வப்போது நாம் அவற்றை dispose செய்துவிடுவோம் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேசிய நெடுஞ்சாலையில் விபத்து ஏற்பட்டால், தலைக் காயத்திற்கு சிகிச்சை அளிக்க செங்கல்பட்டிலிருந்து சென்னையிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு வரக்கூடிய நிலையை அரசு இன்றைக்கு மாற்றியிருக்கிறது. செங்கல்பட்டு மருத்துவமனையில் அதற்காக சிகிச்சை அளிக்கப்படுகிறது. அதை ஒரு speciality மருத்துவமனையாக அம்மா அவர்களின் அரசு, இந்த ஆட்சிக் காலத்தில் தரம் உயர்த்தியிருக்கிறது. அவ்வாறு தரம் உயர்த்தியதற்கு எடுத்துக்காட்டுதான், 50 வருடங்களாக 50 M.B.B.S., இடங்களுடன் இருந்த அந்த மருத்துவக் கல்லூரியை—50 வருடங்களில் எத்தனை ஆட்சிகள் மாறியிருக்கும்; இருந்தும் 50 மருத்துவ இடங்கள்தான் இருந்தன. (குறுக்கீடு) நீங்கள் மாற்றவில்லை. (குறுக்கீடு) விவாதம் செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அங்கு 50 ஆக இருந்த M.B.B.S., இடங்களை, 100 இடங்களாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக 1,000 M.B.B.S. seats இன்றைக்கு இந்த அரசு உயர்த்திக் கொடுத்திருக்கிறது; 508 PG seats இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கு 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கி, ஒரே நேரத்தில் 1,650 M.B.B.S. seats–ஐ

உயர்த்திக் கொடுத்திருக்கிறது. ஆகவே, மிகப் பெரிய வளர்ச்சியை இன்றைக்கு செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி பெற்றிருக்கிறது. ரூ.100 கோடி அளவிற்கு Yoga and Naturopathy Centre அமைக்கவிருக்கிறோம். அதனால், எங்கள் அரசுக்கு appreciation இல்லையென்றாலும், நீங்கள் குற்றச்சாட்டுகளைச் சொல்வது சற்று வருத்தமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜேஷ் குமார், உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

வினா வரிசை எண் 153, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

153—

புதிய மாவட்டம்

***35770—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து பட்டுக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல் புதிய மாவட்டம் உருவாக்குவதற்கான அளவுகோல்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதன்படி, புதிதாக உருவாக்கப்படும் மாவட்டத்திற்கு, பரப்பளவு குறைந்த அளவு 2,500 சதுர கிலோ மீட்டரிலிருந்து 9,000 சதுர கிலோ மீட்டரும், மக்கள்தொகை குறைந்த அளவு 10 இலட்சத்திலிருந்து 30 இலட்சமும், குறைந்தது இரண்டு கோட்டங்களும், 5 வட்டங்களும் மற்றும் 200